

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் இளைஞரணி மாநாடு தீர்மான விளக்க தெருமுனை கூட்டம் போரூரில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், ச.சங்கர் கணேஷ் எம்.சி. தலைமையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் செ.ரவி, பகுதி துணை அமைப்பாளர் இரா.பா. உதயகுமார், ராஜேஷ்,மு. மகேஷ்குமார்,வட்ட அமைப்பாளர்கள் ப. தனசேகரன், விவேக், கிரி (எ)கிரிதரன், மூர்த்தி,தியாகராஜன் ஆகியோரின் வரவேற்பில் மாவட்ட பிரதிநிதிகள் விஜயன்,வட்ட அவைத் தலைவர் செ. இராமையா,வட்ட துணை செயலாளர்கள் ம. சிவா,கி.முரளி, விமலாசேகர்,வட்ட பொருளாளர் பன்னிர்செல்வம், குமார்,ப. சரவணன், மோ.சுந்தர் ஆகியோர் முன்னிலையில் தலைமை கழக பேச்சாளர் நாத்திகம் நாகராசன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பிரபாகரராஜா எம்.எல்.ஏ,ராமாபுரம் வ. செல்வகுமார்எம்.சி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள்: எம்.விநாயகமூர்த்தி, கா.வி.தியாகராஜன், செல்வராஜ், வே. மதியழகன்,இரா. பால்பாண்டியன், ராஜீ எம்.சி,வட்டக் கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ் ராஜ்,த.ரமேஷ்,சுந்தர், அப்பன் (எ) சத்தியமூர்த்தி,தி. சார்லஸ், ஆ.ராதா செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (22.02.2024) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், , நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிறப்புரை : அமைச்சர் மா.சுப்பிரமணியன்! தலைமை: ஆர்.கே.சந்திரேஷ்!

# வேளச்சேரி கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் சேலம் மாநாட்டு தீர்மான விளக்கக் கூட்டம்!

### கந்திலி கரிகாலன் - தமிழச்சி தங்கபாண்டியன் - ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா - துரை கபிலன் - எம்.வினாயக மூர்த்தி பங்கேற்பு!

சென்னை. பிப். 23-

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் திருவான்மியூர் தெற்கு மாட வீதியில் இன்று (23/02/2023 வெள்ளிக்கிழமை) மாலை 05:30 மணியளவில் கழக தலைவர் தங்க தளபதி திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விளக்க தெருமுனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் வி.எம்.டி.ராஜாராமணன், க. கணேஷ் குமார், மாவட்ட பிரதிநிதி தி. பாலாஜி ஆகியோர் வரவேற்கின்ற னர்.

இதில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆர். கே.சந்திரேஷ் தலைமை வகிக்கிறார்.

ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் துரை கபிலன், எம். வினாயக மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் தலைமை கழக சொற்பொழிவாளர் கந்திலி கரிகாலன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அசன் மௌலானா, அரவிந்த் ரமேஷ், காரம் பாக்கம் கணபதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு திடீர் நகர் கே. முருகன் நன்றியுரை ஆற்ற இருக்கும் இந்நிகழ்வில் மாநில மற்றும் மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், தலைமை பொது குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மன்ற செயலாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேளச்சேரி கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். கே. சந்திரேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப்.23 -

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (24.02.2024-சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் படப்பை தில்லை மஹால் திருமணமண்டபத்தில் அவைத்தலைவர் மு.சுப்பிரமணி தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை யாற்றிட,

மாநில பொறியாளர்அணி துணைச் செயலாளர், திருபெரும்புதுார் தொகுதி பார்வையாளர் வே.உமா காந்த் திருமதி.சரஸ்வதி மனோகரன் ஒன்றியக் குழுத்தலைவர்

ஒன்றியக் கழக நிர்வாகிகள் வ.நந்தகோபால்,இ.மணி,வாசுகிமகேஷ்,சி.பார்த்தசாரதி வி.அரி,மு.ராஜேந்திரன்,மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** மார்ச் 1 திரவிட மாடல் முதல்வர் கழக தலைவர் அவர்களின் 71ஆவது பிறந்தநாள் விழா, நாடாளுமன்ற தேர்தல் பணி, கழக வளர்ச்சி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம், பிப்.23-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (23.02.2024, வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் பரணிபுத்தூர் தனம் திருமண மண்டபத்தில் ஒன்றிய கழக அவைத்தலைவர் து.சுந்தர் தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் சிறப்புரை யாற்றிட உள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட பெருந்தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் இரா.நரேந்திரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சரஸ்வதி மனோகரன், ஒன்றியக்குழு துணை தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இக் கூட்டம் ஒன்றிய கழக நிர்வாகிகள் பொன்.ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.ராஜாதேசிங்கு, எஸ்.சந்தானம், எஸ்.கே.துளசிங்கம், பா.ராஜேந்திரன், தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், எஸ்.ஜனார்த்தனன், எம்.ஆர்.நவீன்ராஜ், வெ.கவிபாரதி, பா.கு.தமிழ்வாணன், பி.கதிரவன், கு.பிரவின்குமார், ஆர்.பிரபு, பா.மகேஷ்வரன், வெ.வசந்தகுமார், ரா.அரி பாபு, து.நாராயணன், இராசாமணி சகாதேவன், காமாட்சி பாலு, ஜோஸ்பின் கிளாரா, அமுதா சத்யபிரியா ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொடர்புடைய அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் - இன்று


### தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கைத் துவக்கி வைக்க வருகை தரும்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப். 23 -

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று 23-ஆம் தேதி காலை நடைபெறும் யூ-இமேஜின் தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கை துவக்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திண்டு வந்து, கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணா சிலை அருகில் இன்று காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

இன்று 23-ஆம் தேதி காலை 10.00 மணி அளவில் ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் யூ-இமேஜின், தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கம் துவக்க விழா நடைபெறவுள்ளது.

இந்த துவக்க விழாவில் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கத்தை துவக்கி வைக்கிறார்.

இவ்விழாவிற்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் இன்று காலை 9.00 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இக்கருத்தரங்கினை துவக்கி வைக்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரமாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள்!

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார் !

பல்லவபுரம், பிப். 23 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்3க்கு உட்பட்ட பகுதிகளில் மாமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அனைவருக்கும்சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்க பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.9.70 லட்சம் மதிப்பீட்டில் 37 வது வார்டு சிவகாமி அம்மாள் நகரில் பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் தலைமையில் மாமன்ற உறுப்பினர் மகாலட்சுமி கருணாகரன் முன்னிலையிலும் 36வது வார்டு கலைஞர் கருணாநிதி நகர் கமலா தெருவில் மாமன்ற உறுப்பினர் சரஸ்வதி சந்திரசேகர் முன்னிலையிலும் 35 வது வார்டு நேரு நகர் ராமமூர்த்தி தெருவில் சங்கீதா விஜய் முன்னிலையிலும் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்று இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் (ஆரோ பிளான்ட்) அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் துவக்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து மண்டலம் 2 க்கு உட்பட்ட கணபதிபுரம் மெயின் ரோட்டில் மண்டல தலைவரும் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஆன இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மாமன்ற உறுப்பினர் கீதா நாகராஜன் முன்னிலையில் ரூபாய் 9.70 மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை இ. கருணாநிதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்துக் கூறியதாவது:-

நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காகவும் மகளிர் முன்னேற்றத்திற்காகவும் இரவு பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கிறார். அவர் ஆணைக்கிணங்க நாங்களும் பொதுமக்கள் நலன் கருதி பணியாற்றி வருகிறோம். இப்பகுதியில் வாழும் ஏழை மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தால் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த ஆண்டு 12 இடங்களில் சுத்திகரிப்பு குடிநீர் நிலையங்கள் அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளோம்.

இன்று மூன்றாவது மண்டலத்தில் அஸ்தினாபுரம் பகுதியில் மூன்று இடங்களிலும் நமது கணபதிபுரத்தில் இந்த இடத்திலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்ததில் மகிழ்ச்சி அடைகிறோம். நமது முதல்வர் அவர்களின் மகளிர் உரிமைத்தொகை நமது சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் பெரும்பாலான மகளிருக்கு கிடைக்க பெற்றுள்ளன மற்ற ஏழை தாய்மார்களுக்கும் கிடைக்க வழிவகை செய்து கொண்டிருக்கிறேன். அவர்களுக்கும் உரிமைத் தொகை கிடைக்கவும் நமது தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் இந்த தொகுதிக்கு கொண்டு வருவதில் முன்னுரிமை அளிப்பேன் என்று உங்கள் இடத்தில் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இ.கருணாநிதி எம்.எல்.ஏ. கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர்கள், கழக நிர்வாகிகள் க.ரமேஷ், எம்.ஐ.டி. விஜய், ஜே.வி.சந்திரசேகர், ஆர்.கே.நாகராஜ், எஸ். ராஜ கண்ணா, ஆர்.ராதாகிருஷ்ணன், ஜி.ஜெகநாதன், ஏ.வீரபத்திரன், ஆர். மதுரைவீரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

### இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

தி.மு.க. இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் 27.2.2024 - திங்கள்கிழமை மாலை 4.30 மணியளவில் புலவர் இந்திரகுமாரி தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக இலக்கிய அணி புரவலர்கள், துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், பொருளாளர் ஆகியோர் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**வி.பி.கலைராஜன்**
தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர்





திரு.வி.க. நகர் தெற்குப் பகுதி 76–வது வட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு, அமைச்சர் பி.கே. சேகர்பாபு முனனிலையில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா – 400 அப்பளத் தொழிலாளிகளுக்கு நல உதவிகளை வழங்கினார். உடன் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., மேயர் பிரியா, தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வட்டச் செயலாளர் எஸ்.சசிகுமார் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

# ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் திருத்தம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருப்பத்தூர் மாவட்டத்தில் 06.09.2021 அன்று பிரித்து "முரசொலி"யில் வெளியிடப்பட்ட ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய 3 ஒன்றியங்களில், பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம்** : 1.செட்டியப்பனூர், 2.நெக்குத்தி, 3.பெத்தகல்லுப்பள்ளி, 4.சின்னவேப்பம்பட்டு, 5.சின்னகல்லுப்பள்ளி, 6.சின்னமோட்டூர், 7.கலந்திரா, 8.பெரியமோட்டூர், 9.மண்டலவாடி, 10.கேத்தாண்டப்பட்டி, 11.கூத்தாண்டு குப்பம், 12.காவேரிப்பட்டு, 13.சின்னகம்மியம்பட்டு, 14.பெரியகம்மியம்பட்டு, 15.பொன்னேரி, 16.ரெட்டியூர் ஆகிய 16 ஊராட்சிகள்.

**ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம்**: 1.வேட்டப்பட்டு, 2.சோமநாயக்கன்பட்டி, 3.புள்ளானேரி, 4.திரியாலம், 5.அம்மணாங்கோயில், 6.அக்ராகரம், 7.கல்நார்சாம்பட்டி, 8.சந்திரபுரம், 9.மல்லப்பள்ளி, 10.பணியாண்டபள்ளி, 11.வெலக்கல்நத்தம் ஆகிய 11 ஊராட்சிகள்.

**ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம்**: 1.ஏலகிரிமலை, 2.ஏலகிரி கிராமம், 3.அம்மையப்ப நகர், 4.கட்டேரி, 5.தாமலேரிமுத்தூர், 6.சின்னமூக்கனூர், 7.மூக்கனூர், 8.ஒட்டப்பட்டி, 9.புத்தகரம், 10.கோணாப்பட்டு, 11.பாச்சல் ஆகிய 11 ஊராட்சிகள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.





மதுரை, தேனி, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களை உள்ளடக்கிய கழக மாவட்டங்களின் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம், மாநில துணைச் செயலாளர் கா. ரபிஅஹமது தலைமையில் மதுரை தமிழ்நாடு ஓட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நல உரிமைப்பரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் சிறப்புரையாற்றினார். மதுரை மாநகர் மாவட்ட அமைப்பாளர் ஏ.உஸ்மான் அலி வரவேற்புரை யாற்றினார், அமைப்பாளர்கள் எஸ்.மீராஜான், முகைதீன் பிச்சை, கே.ஷேக் அப்துல்லா, தக்காளி அக்கீம், என்.எம்.சாக்ளா, பி.செல்லத்துரை, மாவட்ட தலைவர், துணைத்தலைவர் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர். விருதுநகர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் டி.எம்.மைதீன்பாஷா நன்றியுரையாற்றினார்.